இந்த மானியத்தின் மீதான விவாதம் அன்று தொடர்ந்து நடக்கும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–36 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(6) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

320. முன்னுள் தொழில்கள்—தொழிலாளர் நல கூட்டுறவுத் துறையில் 20-8-1956ஆம் தேதியன்று வெளியாகி, 29-8-1956ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் I-ல் கண்ட இணைப்பு விதிகளின் பக்கங்கள் 439—453-ல் (ஆங்கிலத்தில்) வெளியான 34/1956 ஆம் எண் அறிவிப்பில் (இது பின்னர் திருத்தப் பெற்றுள்ளது) வெளியிடப்பெற்ற தமிழ்நாடு 1956ஆம் ஆண்டு சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களுக்குக் கடன்கள்-உதவித் தொகை வழங்குதல் குறித்த விதிகளில், திருத்தமொன்று செய்வது குறித்து 23–7–1976 ஆம் தேதியிடப் பெற்ற தொழில் துறையின் 955 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (ஆங்கிலம்-தமிழ்) [தமிழ்நாடு 1922 ஆம் ஆண்டு தொழில்கள் உதவிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1923) 19 (d) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

321. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரண விதிகள் இயற்றுவது குறித்த கூட்டுறவுத் துறையின் 28–1–1978 ஆம் தேதியிடப்பெற்ற 54 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 38/1972) 28 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*152. தொழில் வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ்).

*153. தொழில்கள் பற்றிய 1978–79 ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம் (தமிழ்).

*154. கோரிக்கை எண் 21. மீனளத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978–79 (தமிழ்).

*21—3—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.